மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி

முன்னிலை : - **திருமதி.A. சீதாலெட்சுமி, M.A.,B.L.,**

மாவட்ட உரிமையியல் நீதிபதி , மன்னார்குடி

2024 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 28 ஆம் நாள் புதன்கிழமை

திருவள்ளுவராண்டு 2055 ஸ்ரீ குரோதி வருடம் ஆவணித்திங்கள்12 ம் நாள்

**இடைநிலை மனு எண். 58/2024 -ல்**

**அசல் வழக்கு எண். 52/2018**

1. மன்னார்குடி டி.மு.இலாகா மற்றும் தாலுக்கா, மன்னார்குடி நகரம், பாமணி, எண். 71/3(2), வடுவூர் மெயின்ரோடு என்ற முகவரியில் வசித்து வந்த ராமசாமி மனைவி,இந்து, சுமார் 86 வயதுள்ள வீரம்மாள்(இறந்தார்).

2. மன்னார்குடி டி.மு.இலாகா மற்றும் தாலுக்கா, மன்னார்குடி நகரம், எண்.18, இந்திரா நகர் மாளிகை மேடு என்ற முகவரியில் வசிக்கும் ராமசாமி - வீரம்மாள் மகளும் திருமேணி மனைவியுமான இந்து, சுமார் 55 வயதுள்ள T.கோமதி.

3. மன்னார்குடி டி.மு.இலாகா மற்றும் தாலுக்கா, மன்னார்குடி நகரம், பாமணி, எண். 71/2(2), வடுவூர் மெயின்ரோடு என்ற முகவரியில் வசிக்கும் ராமசாமி மகன் இந்து, சுமார் 50 வயதுள்ள ரவிச்சந்திரன்.

4. மன்னார்குடி டி.மு.இலாகா மற்றும் தாலுக்கா, மன்னார்குடி நகரம், பாமணி, எண். 71/3 ஏ, வடுவூர் மெயின்ரோடு என்ற முகவரியில் வசிக்கும் ராமசாமி மகன் , இந்து, சுமார் 47 வயதுள்ள K.R.வீரப்பன்.

...மனுதாரர்கள்/வாதிகள்

Lrs of the deceased Plaintiff

**//எதிர்//**

மன்னார்குடி டி.மு.இலாகா மற்றும் தாலுக்கா, நெடுவாக்கோட்டை கிராமம் என்ற முகவரியில் வசிக்கும் ராமசாமி மகன், இந்து, 65 வயதுள்ள ராதாகிருஷ்ணன்.

...எதிர்மனுதாரர்/பிரதிவாதி

இம்மனுவானது அசல் வழக்கில் இறந்த வாதியின் சட்டப்படியான வாரிசுகளை சேர்ப்பதற்கு மனுக்கொடுப்பதில் ஏற்பட்டுள்ள 70 நாட்கள் காலதாமதத்தினை மன்னித்து இம்மனுவினை ஏற்றுக்கொள்ள உத்தரவிடக்கோரி கால வரையறை சட்டம் பிரிவு 5ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**இம்மனு தாக்கல் ஆன நாள் :-** 07.03.2022, 10.03.2022, 21.07.2022, 01.12.2022, 01.11.2023

**இம்மனு கோப்பிற்கு எடுக்கப்பட்ட நாள் :-** 26.02.2024

இம்மனுவின்மீது ரூ. 20/- நீதிமன்றக் கட்டணம் செலுத்தப்பட்டுள்ளது.

இம்மனு என் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. P. பொன்னுலிங்கம் அவர்களும், எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு. V.K. சண்முகா அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டும், வழக்காவணங்கள் பரிசீலிக்கப்பட்டும், இன்று வரை என் பரிசீலனையிலிருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.....

**<u>தீர்ப்பாணை உத்தரவு</u>**

01. இம்மனுவின் மனுதாரர்கள், எதிர்மனுதாரருக்கு செலவுத் தொகையாக ரூ. 500/-ஐ வரும் 30.08.2024 தேதிக்குள் நேரடியாக செலுத்தி வைக்கவேண்டும் என்றும், தவறும் பட்சம் தள்ளுபடி செய்யப்படும் என்றும் உத்தரவிடப்படுகிறது.

02. இம்மனுவினை மீண்டும் அழைக்க 30.08.2024

2024 ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 28-ம் நாள் என்னுடைய கையெழுத்தும், இந்நீதிமன்ற முத்திரையும் இடப்பட்டது.

(ஒம்/-A. சீதாலெட்சுமி),
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மன்னார்குடி.